பதிவுஎண். M. 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 19] சென்னை: கார்த்திகை 27 (13—12—71) திங்கள் வெளியூர்: கார்த்திகை 28 (14—12—71) செவ்வாய் [இதழ்: 151

எதிரியின் இழப்பு

இதுவரை கடந்த ஆறு நாள் போரில் பாகிஸ்தானின் இழப்பு வருமாறு:—

விமானங்கள்	80
டாங்கிகள்	148
போர்க் கப்பல்கள்	3
நீர்மூழ்கிகள்	2
பீரங்கிப் படகுகள்	16

டாக்கா நகரைச் சுற்றி நமது படை முற்றுகை

எத்திக்கிலும் தப்பமுடியாதபடி எதிரிகள் சுற்றி வளைக்கப்பட்டனர்

புதுடில்லி, டிச. 13—

வங்க தேசத்தை விடுவிக்கும் போரில் ஈடுபட்டிருக்கும் இந்திய இராணுவம், தலைநகரான டாக்காவை எல்லா முனைகளிலிருந்தும் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

நேற்று ஏராளமான இந்திய இராணுவ வீரர்கள் பாரசூட் மூலம் டாக்கா நகரில் இறக்கப்பட்டனர். இவர்கள் தங்களது பணிகளைச் செவ்வனே செய்து வருவதாக இராணுவ அறிவிப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்திய இராணுவம் உட்புகாதபடி, பாகிஸ்தான் இராணுவம் முக்கிய வழிகளையெல்லாம் தகர்த்து வருவதைத் தடுக்கும் வேலையில் பாரசூட் படையினர் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஐ. நா. அதிகாரிகள் — மற்றும் வெளிநாட்டுக் குடியினர் டாக்காவிலிருந்து வெளியேறும் பொருட்டு ஒரு நாள் விமானத் தாக்குதல் நடத்துவதில்லை என்று இந்திய இராணுவம் காலத்தவணை கொடுத்திருப்பது — டாக்காவைக் கைப்பற்றும் திட்டத்தின் வேகத்தைத் தடுத்து நிறுத்தியிருப்பதாக இராணுவத் தரப்பில் கூறப்பட்டது.

அளிக்கப்பட்டிருந்த போர் நிறுத்தக் காலக்கெடு, பாகிஸ்தான் துருப்புக்களுக்குத் தங்களை ஒன்றுபடுத்தவும் — எதிர்த் தாக்குதலுக்கான ஆயத்தங்களைச் செய்துகொள்வதற்கும் பெரும் வாய்ப்பாகப் பயன்படுகிறதாம்; ஆயினும் இன்னும் சிறிது நாட்களில் டாக்கா வீழ்வது உறுதியாகிவிட்டது.

அர்த்தமின்றி உயிர் இழக்காமல் உடனடியாகச் சரணடையுமாறு இந்தியத் தலைமைத் தளபதி மானெக் ஷா விடுத்த வேண்டுகோளை, மேற்குப் பாகிஸ்தான் இராணுவம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரியவருகிறது; ஆகவே, டாக்காவில் பெரும் அளவில் உயிர்ச்சேதம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. எதிரிகள் தப்பிச் செல்லும் எல்லா வழிகளும் அடைக்கப்பட்டுவிட்டன; நமது முப்படைகளும் விழிப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

உயிர் தப்பும் பொருட்டுப் பல மேற்குப் பாகிஸ்தான் அதிகாரிகள் பர்மாவுக்குத் தப்பிச் செல்லுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

பாகிஸ்தான் துருப்புக்களை ஏற்றிக் கொண்டுவந்த 6 கப்பல்களை நமது கடற்படை மூழ்கடித்துவிட்டது. கத்தியவார் பகுதியில் எதிரியின் உயர்ந்த விமானம் ஒன்றை, நமது நாட்டில் தயார் செய்யப்பட்ட 'மிக' ரக விமானம் பிரமிக்கத்தக்க வகையில் சுட்டு வீழ்த்தியிருக்கிறது.

இரண்டு கப்பல்களையும் இந்தியக் கடற்படை வழிமறித்து மடக்கியது. லைபிரியாவையும் — பாகிஸ்தானையும் சேர்ந்த இந்த இரு கப்பல்களும் கராச்சிக்கு சரக்குகளை ஏற்றிச் சென்றுகொண்டிருந்தன.

கடந்த 8 நாட்களாக நடைபெற்ற போரில் முதல் தடவையாக நமது கப்பற்படை ஒரு சிறிய போர்க் கப்பலை இழந்துவிட்டது; கப்பற்படையைச் சேர்ந்த விமானம் ஒன்றையும் அது இழந்தது.

மேற்குப் பகுதியில்:

மேற்குப் பகுதியில் நமது விமானப் படை எதிரியின் டாங்கிகளின் மீது தொடர்ந்து குண்டுமழை பொழிந்துவருகிறது.

சுமார் 8 டன் எடையுள்ள வெடி மருந்துகளை வீசிப் பாகிஸ்தான் படைகளை எட்டு கிலோமீட்டர் தூரத்துக்குப் பின்வாங்கச் செய்திருக்கிறது.

கார்கில் பகுதியில் பல சாவடிகளையும் இந்தியப் படை கைப்பற்றியிருக்கிறது.

பிடிக்கப்பட்ட பகுதிகளில் சிவில் நிர்வாகம்

புதுடில்லி டிச. 13—

வங்க தேசத்தில் நமது படையால் பிடிக்கப்பட்ட தினஜ்பூரிலும், மற்றும் 4,000 சதுரமைல் பகுதியிலும் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டுவிட்டது.

போருக்குப் பயந்து வெளியேறிய மக்களெல்லாம் வீடு திரும்புகின்றனர்.

இந்தியாவின் உறுதி

ஐ.நா.-வில் சுவரண் சிங் அறிவிப்பு

சென்னை, டிச. 13—

"வங்காள தேச மக்களின் சுதந்தரம் — அடிப்படை உரிமைகளைக் காப்பாற்றி, இந்தியாவின் எல்லைகளிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றும் வரையில் எந்த ஒப்பந்தம் பற்றியோ துருப்புக்களை விளக்கிக் கொள்வது பற்றியோ பேச்சு நடத்துவதில் அர்த்தமில்லை"

என்று, இந்திய வெளிநாட்டு விவகார அமைச்சர் சுவரண் சிங், ஐ. நா. பாதுகாப்புச் சபையில் கூறினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"மேற்குப் பாகிஸ்தானைப்போல் இந்தியாவுக்கு மண்ணாசை கிடையாது; இப்பொழுது நடைபெறுவது ஒரு பெரும் சமுதாயப் போராட்டமாகும்."

மத்திய அரசு ஊழியர்கட்கு ஊதிய உயர்வு

அக்டோபர்முதல் வழங்க முடிவு— நிதியமைச்சர் சவான் அறிவிப்பு

புதுடில்லி, டிச. 13—

மத்திய அரசு ஊழியர்கட்கு இடைக்கால நிவாரணம் வழங்கவேண்டும் என்று ஊதியக் குழு தெரிவித்துள்ள பரிந்துரையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

இன்று நிதியமைச்சர் சவான் இத்தகவலை நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இந்த ஊதிய உயர்வு ரூ. 7-முதல் ரூ. 15 வரை இருக்கும்; அக்டோபர் முதல் இந்த ஊதிய உயர்வு வழங்கப்படும்.

"ஊழியர் பிரதிநிதிகளின் ஒப்புதலுடன், அக்டோபர் — நவம்பர் திங்களின் ஊதிய உயர்வுத் தொகை, ஊழியர்களின் பிராவிடண்ட் நிதிக் கணக்கில் சேர்க்கப்படும்" என்றார் சவான்.

பாதுகாப்புச் சபைக் கூட்டம்

பூட்டோவேண்டுகோள் மீது ஒத்திவைப்பு

வாஷிங்டன், டிச. 13—

இந்தியா — பாகிஸ்தான் போர் குறித்து ஆராய உடனடியாகப் பாதுகாப்புச் சபையைக் கூட்டவேண்டும் — என்று அமெரிக்கா, ஐ. நா. அவையைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

நேற்று பாதுகாப்புச் சபை கூடுவதாக இருந்ததாகவும் ஆனால் தமது அரசிடமிருந்து முக்கியமான தகவல் ஒன்று வந்ததன் காரணமாக கூட்டத்தைத் தள்ளிவைக்குமாறும் பூட்டோ கேட்டுக் கொண்டிருந்ததனால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகவும் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

எதிரிகள்

கப்பல் கப்பலாகக் கவிழ்கின்றனர்

விசாகப்பட்டினம், டிச. 13—

வங்காள தேசத்திலிருந்து பாகிஸ்தான் துருப்புக்களை ஏற்றிச் சென்ற ஆறு எதிரி கப்பல்களை இந்தியாவின் கிழக்கு வட்டாரக் கடற்படையைச் சேர்ந்த விமானங்கள் குண்டுகளை வீசி மூழ்கடித்தன.

தப்பி ஓட முயன்ற மற்ற ஐந்து எதிரி கப்பல்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது; ஒரு கப்பல் எரிந்தது; மற்றொன்று, கடுமையாக சேதமடைந்தது; மற்றும் மூன்று கப்பல்களும் சேதமடைந்தன.

காக்ஸ் பஜார் பகுதியில் மங்காஷல நதியில் ஒரு பாகிஸ்தான் பீரங்கிப் படகு அழிக்கப்பட்டது.

இதுவரை 4,000 பேர் வங்க தேசத்தில் சரண்

புதுடில்லி, டிச. 12—

வங்காள தேசத்தின் கிழக்குப் பகுதியில் ஏறக்குறைய 4,000 பாகிஸ்தான் படையினர் இந்திய இராணுவத்தினரிடம் இதுவரையில் சரணடைந்திருக்கிறார்கள்.

சரணடைந்தவர்களில், பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் சிலரும் உள்ளனர்.

பாகிஸ்தான் துருப்புக்களால் ஏற்பட்ட அச்சம்

கற்பைக் காப்பாற்றிக்கொள்ள 12 பெண்கள் தற்கொலை

வங்காள தேசத்தில் விடுவிக்கப்பட்ட சவுதங்கா நகரில் உள்ள ஒரு கிணற்றில் 12 பெண்களின் பிணம் கிடந்தது; இந்தப் பெண்கள் எல்லாரும் பாகிஸ்தான் சிப்பாய்களுக்குப் பயந்து கற்பைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தற்கொலை செய்துகொண்டார்கள் என்று கருதப்படுகிறது; இவர்களின் கழுத்தில் இறுக்கமாகக் கட்டப்பட்ட கயிறுகள் இருந்தன.

தமிழக அரசின் செலவுத் துணை மதிப்பீடு

சென்னை, டிச. 13—

1971—72-ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்ட முதல் துணை மதிப்பீடுகளை இன்று சட்டப் பேரவையில் முதலமைச்சர் தாக்கல் செய்தார்.

ரூ. 14.45 கோடியில் ரூ 7.32 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சியவை மூலதனக் கணக்கிலும் சேர்ந்தன.

சென்னை, டிச. 13—

களத்திலே போராடிக்கொண்டிருக்கும் நமது படை வீரர்கட்கு ஊறுகாய்கள் அனுப்பிவைக்க சென்னை மகளிர் சார்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கட்ச் பகுதியில் வெற்றி முரசம்

ஜோத்பூர், டிச. 12—

கட்ச் பகுதியில் உள்ள சாட்பெட் திட்டுப் பகுதி முழுவதையும் நேற்று நள்ளிரவுக்குப் பின் இந்தியப் படைகள் கைப்பற்றின.

150 சதுர மைல் பரப்பளவு கொண்ட இந்தப் பகுதி உலக நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் இந்தியா பாகிஸ்தானுக்கு அளித்ததாகும்.

இந்தப் பகுதியில் எதிரிப் படைகள் கடுமையாக மோதின; ஆனாலும், இறுதியில் இந்தியப் படைகள் அவைகளை முறியடித்துவிட்டன.

மத்திய அரசின் புதிய வரி விதிப்பு

ஆண்டுக்கு ரூ. 135 கோடி கூடுதலாகக் கிடைக்கும்

புதுடில்லி, டிச. 13—

நெருக்கடி நிலையை முன்னிட்டுக் கூடுதல் வருவாய்க்கான புதிய வரிகளை நாடாளுமன்றத்தில், நிதியமைச்சர் திரு சவான் இன்று அறிவித்தார்.

ஒரு முழு ஆண்டில் ரூ. 135 கோடி வருவாய் கிடைக்கக்கூடிய வரி விதிப்புகளை அவர் அறிவித்தார்; இந்த வரி விதிப்பின் மூலம் நடப்பு ஆண்டின் எஞ்சிய மாதங்களில் ரூ. 40 கோடி கிடைக்கும்.

தோற்ற பாகிஸ்தான் துருப்புக்கள்

கொள்ளையடித்துக்கொண்டு ஓட முயற்சி

கடந்த 10-ம் நாள் குஷ்டியாவிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட பாகிஸ்தான் இராணுவம், அங்குள்ள பாகிஸ்தான் ஸ்டேட் பாங்கியைக் கொள்ளையடித்து அழித்துவிட்டுச் செல்ல முற்பட்டதாகவும் ஆனால் பாங்கியின் முக்கிய கருவூலங்கள் பாதுகாக்கப்பட்டுவிட்டதாகவும் செய்தி கிடைத்துள்ளது.

தி. மு. கழகத் தலைமைச் செயற்குழுத் தீர்மானங்கள்

பாகிஸ்தான் சர்வாதிகார ஆட்சிக்குக் கடும் கண்டனம் ★ **மத்திய -- மாநில அரசுகளின் நடவடிக்கைகட்கு முழு ஆதரவு** ★ **சுதந்தர வங்க தேசம் உருவாவதற்கு வரவேற்பு** ★ **நியாயத்தைப் புறக்கணித்த நாடுகளுக்குக் கண்டனம்**

தியாகத் தழும்பு ஏற்றிடும் தீரர்களுக்கு வீர வணக்கம் ★ வேறுபாடு களைந்து ஒத்துழைப்புத் தர அனைவருக்கும் வேண்டுகோள் ★ கழகச் சார்பில் போர் நிதிக்கு ரூ. 25,000

கழகப் பொருளாளர் எம்.ஜி.ஆர். தலைமையில் கலைக்குழு அமைப்பு ★ **தட்டுப்பாடு -- விலையேற்றம் -- வணிகப் பெருமக்களுக்கு வேண்டுகோள்** ★ **அரசாங்கத்துடன் ஒத்துழைக்குமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள்**

சென்னை, டிச. 13—

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழுவின் அவசரக் கூட்டம், நேற்று காலை, சட்டமன்ற தி. மு. க. கட்சி அலுவலகத்தில், கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்செயலாளர் நாவலர், துணைப் பொதுச்செயலாளர்கள் என். வி. நடராசன், க. இராசாராம், காஞ்சி மணிமொழியார், மற்றும் செயற்குழு உறுப்பினர்களான பேராசிரியர் க. அன்பழகன், திருமதி சத்தியவாணிமுத்து, ப. உ. சண்முகம், எஸ். ஜே சாதிக் பாட்சா, டி. கே. சீனிவாசன், தில்லை வில்லாளன், மற்றும் மாவட்டச் செயலாளர்கள் கலந்துகொண்டனர்.

சிறப்பு அழைப்பின்பேரில், அமைச்சர்கள் அன்பில் தர்மலிங்கம், சி. பா. ஆதித்தனார், ஓ பி. இராமன், எஸ். இராமச்சந்திரன், மு. கண்ணப்பன், புதுவை முதல்வர் எம். ஓ. எச். பாரூக், புதுவை அமைச்சர்கள் இராமசாமி, ஆறுமுகம், இராமச்சந்திரன் மற்றும் இரா. செழியன் எம்.பி., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ., களந்தை ஜின்னா ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :—

கிழக்கு வங்க மக்கள் சனநாயக ரீதியில் அளித்த தீர்ப்பை மதிக்காமல் -- அந்த மக்களை இராணுவத்தைக் கொண்டு கொன்று குவித்து ஒரு கோடி மக்களை அகதிகளாக இந்தியாவுக்கு விரட்டிவிட்டு -- அந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்ட இந்தியாவின் மீது படையெடுத்திடவும் துணிந்த பாகிஸ்தான் சர்வாதிகார ஆட்சியை இந்தச் செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

கிழக்கு வங்கப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்று விரும்பிய இந்தியா மீது படையெடுத்த பாகிஸ்தானுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்திய அரசு மேற்கொண்டுள்ள முடிவை இச்செயற்குழு ஆதரிப்பதோடு, இந்தப் போரின் தொடர்பாக மத்திய அரசு -- மாநில அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்குத் தி. மு. கழகம் தனது முழு ஒத்துழைப்பை அளிக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறது.

சனநாயகத்தை மதிக்க மறுத்த பாகிஸ்தான் அரசுக்கு எதிராகக் கிழக்கு வங்கத்தில் வங்காள தேசம் உருவானதை வரவேற்பதோடு, அந்தப் புதிய நாட்டை நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் செய்த இந்திய அரசினையும் -- தலைமையமைச்சர் இந்திரா காந்தியையும் இந்தச் செயற்குழு பாராட்டுகிறது.

தவிர்க்க முடியாத சூழ்நிலையில் போராட்டத்தில் குதித்துள்ள இந்திய நாட்டின் நியாயங்களைப் புறக்கணித்து அமெரிக்கா போன்ற அரசுகள் நடந்துகொள்ளும் போக்கை இச்செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதோடு, சோவியத் இரஷ்யா போன்ற நாடுகள் இந்தியாவின் பக்கம் ஆதரவு காட்டுவதற்காக நன்றியினையும் இச்செயற்குழு தெரிவித்துக்கொள்கிறது.

போர்க்களத்தில் நாடு காக்கத் தியாகத் தழும்பு ஏற்றிடும் தீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்துவதோடு -- அவர்களின் குன்றாத நாட்டுப் பற்றுக்கு இச்செயற்குழு தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

இந்தியாவின் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, கட்சி -- மதம் -- சாதி ஆகிய வேறுபாடுகளைக் களைந்து இந்தியப் பாதுகாப்புக்குத் தேவையான எல்லா ஒத்துழைப்பையும் தரவேண்டும் என்று அனைவரையும் இச்செயற்குழு வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் திரட்டும் போர்ப் பாதுகாப்பு நிதிக்கு தி. மு. கழகத் தலைமை நிலையம் சார்பில் ரூ 25,000 வழங்குவது என்று இச்செயற்குழு முடிவு செய்கிறது.

கலை நிகழ்ச்சிகளின் வாயிலாக இந்தியப் பாதுகாப்புப்பற்றிய பிரசாரத்தைச் செய்திடவும் -- மேலும் நிதித் திரட்டிப் பாதுகாப்பு நிதிக்குச் சேர்த்திடவும் கழகப் பொருளாளர் -- புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் கலைக் குழு ஒன்றை அமைப்பது என்றும் இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

போர்க் காலத்தில் உணவு போன்ற பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாத வகையிலும் -- விலையேற்றம் ஏற்படாதவகையிலும் -- பொதுநலன் கருதி வணிகப் பெருமக்கள் அரசுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் என இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

உணவுப்பொருட்களின் உற்பத்தி போதிய அளவில் இருந்தாலும், போர்க் கால நெருக்கடியைப் பயன்படுத்திப் பொருள் தட்டுப்பாட்டை உருவாக்கும் வகையிலும் -- கொள்ளை இலாபம் பெறும் நோக்கிலும் ஈடுபடுவோர்மீது கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கும் அரசுடன் ஒத்துழைக்குமாறு பொதுமக்களை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

இரங்கல்

1. கடந்த பத்து நாட்களாக நடைபெற்றுவரும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு எதிர்ப்பும் போரில் உயிர் துறந்த நமது இராணுவ வீரர்களுக்கு இச்செயற்குழு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

2. அறிவியக்கக் காலந்தொட்டு நாட்டின் சமுதாய வளர்ச்சிக்குப் பல்வேறு துறைகளில் பெருந் தொண்டாற்றியும், தி. மு. கழகத்தின் துவக்கக் கால முதல் அதன் கொள்கை -- கோட்பாடுகள் நாட்டில் வேரூன்றுவதற்குப் பல்வேறு தியாகங்களையும் இன்னல்களையும் ஏற்றுக் கழகத்தின் முக்கியத் தூண்களாக விளங்கியும், கழகத்தின் பல்வேறு நிர்வாகப் பொறுப்புகளில் சீரிய தொண்டாற்றியும், நாடாளுமன்றம் -- மாநிலங்களவை -- சட்டமன்ற மேலவை ஆகியவற்றில் கழக உறுப்பினர்களாக இருந்து இறுதிவரை கழக இலட்சியங்களுக்காக உழைத்தவர்களுமான பேளுக்குறிச்சி பெரியவர் ஜி. பி. சோமசுந்தரம், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, உடுமலைச் செயல்வீரர் ப. நாராயணன் ஆகியோரின் மறைவு குறித்து இச்செயற்குழு பெரிதும் வருந்துவதுடன், மறைந்த அந்த மாவீரர்களுக்குத் தனது மரியாதையையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

3. கழகத்தின் கொள்கை -- கோட்பாடுகளைப் பட்டிதொட்டியிலும் பரப்பிடும் வகையிலும் பேச்சாலும் -- சுறுசுறுப்பான உழைப்பாலும் பெருந்தொண்டாற்றி, அவரவர் பகுதிகளில் கழகத்தின் இன்றியமையாத் தோழர்களாகவும் விளங்கிய அருமைச் செயல்வீரர்கள் சிற்றுளி சுப்பிரமணியம், சேலம் ஆர். வி. கணபதி, சென்னை ந. செயராமன், கரூர் குழந்தைவேலு ஆகியோரின் மறைவுக்கு இச்செயற்குழு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

4. நீதிக் கட்சிக் காலந்தொட்டு சுயமரியாதை இயக்க வீரராகவும், திராவிடர் கழக நிர்வாகக் குழுத் தலைவராகவும் திகழ்ந்த திருச்சி வழக்கறிஞர் தி. பொ. வேதாசலம் அவர்கள் மறைவுக்கும் இக்குழு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

5. இந்தியாவின் வடகோடி மாநிலமான காஷ்மீரத்தின் திறமிக்க முதலமைச்சரும் -- மதத்தின் பேரால் மாய்மாலம்புரிந்து வரும் பாகிஸ்தானத்தின் நச்சுக் கருத்துக்களை வெகுவாகச் சாடி வந்தவரும் -- முற்போக்குக் கொள்கை படைத்த சிறந்த அரசியல்வாதியுமான காஷ்மீர் முதலமைச்சர் திரு. சாதிக் அவர்கள் மறைவுக்கு இச்செயற்குழு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

6. மதுரை விமான விபத்தில் உயிர் துறந்தோருக்கு இச்செயற்குழு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

‘விமர்சனம்’ என்பதற்கு வரையறை இல்லையா?

இந்தியாவைப் பலகீனப்படுத்தும் போக்கில் எழுதுவது முறையா?

சென்னை, டிச. 12--

“நாடு நெருக்கடியான நேரத்தில் இருக்கும்போது, இந்திய நாட்டுக்கு எல்லா வகையிலும் பல்வேறு தியாகங்களுக்கு உட்பட்டு பொறுப்புணர்ச்சியோடு உதவி புரியவேண்டுமென்று முடிவு எடுத்துக்கொண்டிருக்கின்ற இந்த வேளையில், இச்சபையில் இருக்கும் ஆளும் கட்சியின்மீதும் -- ஆளும் கட்சியின் முதலமைச்சர் மீதும் தேசத் துரோகக் குற்றம் சாட்டி பத்திரிகையில் எழுதுவது விமர்சனந்தானா?

“திராவிட முன்னேற்றக் கழகமானாலும் -- திராவிடர் கழகமானாலும் -- பெரியார் அவர்கள் ஆரம்பித்த சுயமரியாதை இயக்கமானாலும் -- அந்தக் காலத்திலே இருந்தே இந்த இயக்கத்திலே ஈடுபட்டு வருகிறேன்’ என்ற நிலையில், உலக நாடுகளில் அன்றிலிருந்தே எங்களுக்குப் பிடித்தமான நாடு சோவியத் நாடுதான்!

“சோவியத் நாட்டில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியை இந்த நாட்டில் எடுத்துச் சொல்லி -- அப்படிப்பட்ட சமதர்ம மணம் நம் நாட்டிலும் கமழ வேண்டுமென்று வாதாடிப் போராடி வருகின்றவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கின்றவர்கள்! அப்படிப்பட்ட பரம்பரையைச் சேர்ந்த என்னை, ‘அமெரிக்காவுக்கு வக்காலத்து வாங்குவதாக’ எழுதியிருக்கிறார்கள்.

“அமெரிக்க அரசாங்கம் என்னை ஏன் அழைத்தது என்பதைப் பற்றி, கடந்த 6-ந் தேதியன்று இம்மன்றத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீது பேசுகின்ற நேரத்தில், ‘அமெரிக்கர்கள் நம் பக்கம் இருக்கிறார்கள்; அமெரிக்க அரசு நம்பக்கம் இல்லாவிட்டாலும், அமெரிக்க மக்கள் நம் பக்கம் இருக்கிறார்கள்’ என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

“நான் சொன்னதை விமர்ச்சிப்பதைப் பற்றிக் கவலை இல்லை; எவ்வளவோ வகையில் அதை விமர்ச்சிக்கலாம்; ‘அமெரிக்க மக்கள் அப்படித்தான் இருப்பார்கள் -- அவர்களை நம்பத் தேவையில்லை’ என்று விமர்ச்சிக்கலாம்; ஆனால், ‘தேசத் துரோகமான காரியத்தில் இந்த மாநில அரசு ஈடுபடுகிறது -- நாட்டை விலைக்கு விற்கிறது’ என்று எழுதுவது, ‘இங்கே உனக்கு ஒரு நண்பன் இருக்கிறான்’ என்று யாகியா கானுக்குச் சுட்டிக்காட்டுவது போல் ஆகாதா? அது இந்தியாவைப் பலகீனப்படுத்தும் செயலாகாதா?

“அரசுக்கு விரோதமாக இருப்பவர்களையெல்லாம் கைது செய்து விடுவது என்றால், மற்ற அரசியல் கட்சித் தலைவர்களையெல்லாம் கைது செய்யமுடியும்; ஆனால் அப்படிப்பட்ட இழிந்த மனப்பான்மை எங்களுக்குக் கிடையாது.

“மொழிப் போராட்டத்திற்குப் பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்திய காலமெல்லாம் இந்த நாட்டில் இருந்தது; இப்போது அந்த வகையில் பாதுகாப்புச் சட்டம் பயன்படுத்தப்படவில்லை.

“‘தேசத் துரோகமாக ஒரு அரசே ஈடுபடுகிறது’ என்று எழுதுகின்ற -- பேசுகின்ற அளவுக்குத் தேசத் துரோகத்தைச் செய்கின்றவர்கள்மீதுதான் இந்தப் பாதுகாப்புச் சட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

“நிச்சயமாக உறுதி அளிக்கிறேன் -- அரசியல் கட்சிகளைப் பயமுறுத்த நிச்சயமாக இந்தச் சட்டம் பயன்படுத்தப்படமாட்டாது!”

--முதலமைச்சர் கலைஞர்

(சட்டப் பேரவையில் பத்திரிகை ஆசிரியர்கள் கைது பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது விளக்கம் அளிக்கையில்)

நாட்டுப் பாதுகாப்பு :

நாவலர் சொல் கேளீர்!

“நாம் யார்மீதும் வலிய சண்டைக்குப் போவதும் கிடையாது -- வரும் சண்டையையும் விடுவதும் கிடையாது.

“போர் முயற்சிகளுக்குச் செலவு ஏற ஏற வாழ்க்கை வசதிகளைக் குறைத்திட நாம் தயாராக இருக்கவேண்டும்.

“போர் வளர வளரப் பல்வேறு பொருள்களின் பற்றுக்குறை ஏற்படும்; இவற்றைத் தாங்கிக்கொள்ளப் பொதுமக்கள் தயாராக இருக்கவேண்டும்.

“இங்குள்ள கள்ளமார்க்கெட்காரர்கள் தான் பாகிஸ்தானின் உண்மையான நண்பர்கள் ஆவார்கள்; பொதுமக்கள் துணிவுடன் கண்காணிப்பாக இருந்து அவர்களைக் காட்டிக் கொடுக்கவேண்டும்.

“போரின் விளைவாகச் சமூகப் பழக்க வழக்கங்களைக்கூட மாற்றிக் கொள்ள வேண்டிவரும்; போரில் மரணம் அடைந்தவர்களின் இளம் மனைவிகளுக்கு வாழ்வு அளிக்கும் விதத்தில் அவர்களை மறுமணம் செய்துகொள்ளும் துணிவுகூட நமது இளைஞர்களுக்கு வரவேண்டும்.

“இந்தநேரத்தில், வீண் செலவுகளையும் -- ஆடம்பரங்களையும் குறைத்துக் கொள்ளவேண்டும்; விழாக்களில் மாலைகள் போடுவதற்குப் பதில் பாதுகாப்பு நிதிக்குப் பணமாகக் கொடுத்துவிட வேண்டும்; அந்த உணர்வை நாம் அத்தனைப்பேரும் பெற்றுக் கொள்ள வேண்டும்.”

(சென்னைப் பொதுக்கூட்டத்தில்)

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

14--12--71

சென்னை 2-வது வட்டம்

தி மு.க. சார்பில் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவும் -- பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் கண்டனமும்; மாலை 7 மணிக்கு காசிமேடு -- செயின்ட் சேவியர் தெருவில்; தலைவர் : டி. நடராசன்; பேசுவோர் : அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் நடிகர் ஒ. ஏ. கே. தேவர், கோ. செங்குட்டுவன், செல்வி கஸ்தூரி, மு. க. ஸ்டாலின், மு. வேதாசலம் எம்.எல்.ஏ., பி. ஏ. என். இராசரத்தினம், இரா. மு. மனோகரன் எம்.சி., கே. பி. பாண்டியன், அ. புகழேந்தி, பொ. இராமச்சந்திரன்.

போர் பற்றிய திரைப் படம்

தமிழக அரசு தயாரித்து வெளியிடும்

சென்னை, டிச. 12—

“இந்தியா -- பாகிஸ்தான் போர் குறித்துச் சிறிய அளவில் ஒரு செய்தி விளக்கத் திரைப் படத்தைத் தமிழக அரசின் திரைப் படப் பிரிவு தயாரித்து வெளியிட ஏற்பாடு நடக்கிறது”

என்று இன்று சட்டப் பேரவையில், கே. டி. கே. தங்கமணி (வலது கம்யூ.) கேள்விக்குப் பதிலளித்து முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் அறிவித்தார்.

“தமிழக அரசின் செய்தி -- பொதுமக்கள் தொடர்புத் துறையின் சார்பில் போர் காரணமாக எழுந்துள்ள நிலைமையில் மக்கள் ஆதரவைத் திரட்டும் சுவரொட்டிகளையும் வெளியிட முடிவு செய்யப்பட்டிருக்கிறது” என்றும் முதலமைச்சர் சொன்னார்.

சென்னையில் தமிழக அரசு நடத்தும் திரைப் படப் பிரிவில், நடிப்பு -- ஒளி -- ஒலிப்பதிவு உள்ளிட்ட பல துறைகளில் பயிற்சி கொடுப்பதற்காக 82 மாணவர்கள் சேர்ந்துள்ளனர்” என்றும் இன்னொரு துணைக் கேள்விக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் தெரிவித்தார்.

‘தமிழரசு’ -- வார இதழ்

“தமிழ்நாடு அரசின் சார்பில் வெளியிடப்படும் திங்கள் இருமுறை இதழான ‘தமிழரசு’ இதழை வார இதழாக வெளியிடத் திட்டம் உள்ளது; அச்சக வசதி விரிவு செய்யப்பட்ட பிறகு இம்முயற்சி மேற்கொள்ளப்படும்”

என்று முதலமைச்சர் அவர்கள், சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

தட்டெழுத்து -- சுருக்கெழுத்து பயிற்சியின் அவசியம்

சென்னை, டிச. 11—

“தட்டெழுத்து -- சுருக்கெழுத்து ஆகியவை தெரிந்திருப்பது வாழ்க்கைக்கு மிகவும் பயன் தரும்; குறிப்பாகப் பெண்களுக்குத் தட்டெழுத்து தெரிந்திருந்தால், அவர்கள் தங்கள் கணவன்மார்களுக்கு உதவி புரிவதில் உறுதுணையாக இருக்க முடியும்.

“உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் 9, 10, 11-வது வகுப்புகளில் தட்டெழுத்துப் பயிற்சி வகுப்புகள் வைத்தால் நல்ல பயன் ஏற்படும் என்று கருதுகிறேன்; இதற்கு எந்தவகையில் ஆக்கம் தரலாம் என்று ஆராய்ந்து சொல்லும்படி அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்”

என்று கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சுட்டிக் காட்டித் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் தட்டெழுத்து -- சுருக்கெழுத்து ஆகியவை கற்றுத் தரும் பயிற்சி நிலையங்களின் சார்பில் நடைபெற்ற விழாவில் கலந்து அமைச்சர் இத்தொடர்பில் மேலும் கூறியதாவது :—

“இப்படிப்பட்ட பயிற்சி நிலையங்களுக்கு ஆண்டுதோறும் அனுமதி வழங்கும் முறையை மாற்றி நிரந்தர அனுமதி தேவை என்று கோரப்பட்டிருக்கிறது; இந்த முறையில் இருக்கும் குறைபாட்டையும் --- சிரமத்தையும் அரசு உணர்ந்திருக்கிறது.

தட்டெழுத்துப் பயிற்சி நிலையங்கள் குறித்து ஆராய்ந்து பரிந்துரை செய்வதற்குச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப் பொருளாதாரப் பேராசிரியர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவிடம் தெரிவித்தால் அது கவனிக்கும்.

நிரந்தர அனுமதிக்கு என்னென்ன நிபந்தனைகளை நிறைவு செய்ய வேண்டும் என்று நாம் முடிவு செய்துவிட்டால் இதில் சிரமம் ஏற்படாது.

எஸ். எஸ். எல். சி. பரீட்சை விடைத் தாள்களைச் சென்னை நகரத்துக்குக் கொண்டுவந்து திருத்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதுபோல், தட்டெழுத்து -- சுருக்கெழுத்து பரீட்சை விடைத் தாள்களையும் திருத்த வழிவகை செய்யவேண்டும் என்று நீங்கள் கேட்டுள்ள வேண்டுகோளை ஏற்பதற்கில்லை; ஏனெனில், எஸ். எஸ். எல். சி. பரீட்சையை 2 இலட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் எழுதுகிறார்கள்; பரீட்சை எழுதிய மாணவர்கள் தங்கள் விடைத் தாள் எந்த ஊருக்குத் திருத்துவதற்காகப் போகிறது என்பதை இரகசியமாக அறிந்து -- அந்த ஊருக்குச் சென்று குறுக்கு வழியில் தேர்வு பெற முயற்சிப்பதைத் தடுக்க இந்த முறை மேற்கொள்ளப்பட்டது.

தட்டெழுத்துப் பரீட்சையைப் பொறுத்தவரையில், இது, பள்ளி இயக்குநர் மேற்பார்வையில் இல்லாமல் தொழில்நுட்பக் கல்லூரி இயக்குநரிடம் இருப்பதால் எஞ்சினீயரிங், தொழில் நுட்பக் கல்லூரி (பாலிடெக்னிக்) பரீட்சை விடைத் தாள்களைத் திருத்தும் முறை கடைபிடிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் பள்ளிக்கூடங்களிலும -- கல்லூரிகளிலும் -- இது போன்ற நிறுவனங்களிலும் மற்ற மாநிலங்களைவிட ஒருபடி அதிகமான பயிற்சி அளிக்கப்படுகிறது என்ற நிலையை உருவாக்கினால், நம் மாணவர்கள் மற்றவர்களைவிட ஒருபடி ஓங்கி நிற்பார்கள்; இது, அவர்கள் வேலை வாய்ப்புபெற உதவும்.”

கட்டாயக் கிராசுட்டி சட்டம்

மக்களவையில் தாக்கல்

புதுடில்லி, டிச. 12—

தொழிற்சாலைகள் -- சுரங்கங்கள் -- மலைத் தோட்டங்கள் -- கடைகள் மற்றும் இதர நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் கிராசுட்டி அளிக்க வகை செய்யும் மசோதா ஒன்றைத் தொழிலாளர் துறை அமைச்சர் காடில்கர் மக்களவையில் தாக்கல் செய்தார்.

உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கான கிராச்சுட்டி திட்டம் தவிர, தொழிலாளர்களுக்குக் கிராச்சுட்டி பட்டுவாடாவை ஒழுங்குபடுத்த தற்போது மத்திய சட்டம் எதுவும் இல்லை; சென்ற ஆண்டு கேரள அரசு தொழிற்சாலைகள் -- மலைத் தோட்டங்கள் -- கடைகள் -- நிறுவனங்கள் ஆகியவற்றின் தொழிலாளர்களுக்குக் கிராச்சுடி அளிக்க வகை செய்யும் ஒரு சட்டத்தை இயற்றியது; இதேபோல் மேற்கு வங்க அரசு இவ்வாண்டு ஜூன் மாதம் இதுபோன்ற ஒரு திட்டத்தை அவசர சட்டத்தின் மூலம் கொண்டுவந்தது.

தொழிற்சாலைகள் -- மலைத்தோட்டங்கள் -- கடைகள் -- மற்றும் இதர நிறுவனங்களில் பணியாற்றும் மாதம் ரூ. 750வரை ஊதியம் பெறும் ஊழியர்களுக்குக் கிராச்சுட்டி தொகை 15 மாதச் சம்பளத்துக்குமேல் அதிகமாக இராது; சம்பளம் என்பது அடிப்படைச் சம்பளம் -- கிராக்கிப் படி இரண்டும் சேர்ந்தது.

வேலையிலிருந்து ஓய்வு பெற்றால் அல்லது இராஜினாமா செய்தால் அல்லது விபத்து -- நோய் நொடியில் மரணமடைந்தால், கிராக்கிப் படி அளிக்க இம்மசோதா வகை செய்கிறது

ஓராண்டு சேவை முடிந்து இருந்தால், அவர் கடைசியாக வாங்கிய சம்பளத்தில் சரி பாதி அல்லது 6 மாதத்துக்குமேல் இருந்தால் அதில் ஒரு பகுதி கிராச்சுட்டியாகத் தரப்படும்.

கிராச்சுட்டி தொகை 15 மாதச் சம்பளத்துக்குமேல் அதிகமாக இராது.

சம்பளம் என்பது, அடிப்படைச் சம்பளம் -- கிராக்கிப் படி இரண்டும் சேர்ந்தது.

இந்தியாவுக்கு நயவஞ்சகம் செய்வதாகாதா?

புதுடில்லி, டிச. 12—

அமெரிக்கா உட்பட பல நாடுகளுடன் பாகிஸ்தான் இராணுவ ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது; அந்த ஒப்பந்தப்படி போர்க் கருவிகள் வாங்கி -- அவற்றைப் பயன்படுத்தி இந்தியாவுடன் போரிட பாகிஸ்தான் திட்டமிட்டிருக்கிறது; இதற்காக ‘ஆயுத உதவி செய்யுங்கள்’ என்று அந்த நாடுகளிடம் பாகிஸ்தான் அவசரமாக வேண்டுகோள் விடுத்திருக்கிறது; இதைச் சுட்டிக்காட்டி, புதுடில்லியில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி கூறியதாவது :—

“இந்தியா--பாகிஸ்தான் போரை முன்னிட்டு வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்கள் வாங்கப் பாகிஸ்தான் முயற்சி செய்கிறது; இராணுவ ஒப்பந்தம் -- செய்து கொண்ட நாடுகளிடம் அது ஆயுத உதவி கேட்டிருக்கிறது; இதற்காகப் பாகிஸ்தானுக்கு அந்த நாடுகள் ஆயுத உதவி அளிக்கக்கூடாது.

“பாகிஸ்தானுடன் இந்த நாடுகள் இராணுவ ஒப்பந்தம் செய்த போதே, இந்தியா எதிர்ப்புத் தெரிவித்தது; ஆனால் கம்யூனிசத்துக்கு எதிராகப் பயன்படுத்துவதற்குத்தான், பாகிஸ்தானுக்கு ஆயுதம் கொடுப்போம்; சனநாயகத்துக்கு எதிராகப் பயன்படுத்துவதாக இருந்தால் பாகிஸ்தானுக்கு ஆயுதம் கொடுக்கமாட்டோம்’ என்று அந்த நாடுகள் இந்தியாவுக்கு உறுதி மொழி அளித்தன.

“ஆகவே, இப்போது பாகிஸ்தானுக்கு ஆயுதம் கொடுத்தால் அது இந்தியாவை நயவஞ்சகமாக ஏமாற்றுவதாகும்.”

திருவில்லிபுத்தூர் பெயர் மாற்றத்துக்கு டில்லி மறுப்பு

சென்னை, டிச. 11—

‘ஸ்ரீ வில்லிப்புத்தூரி’ன் பெயரை, ‘திருவில்லிப்புத்தூர்’ என்று மாற்ற வேண்டும் என்று மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்தது.

“வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இந்தப் பெயர் இருப்பதால், ‘ஸ்ரீவில்லிப்புத்தூர்’ என்ற பெயரே இருக்கலாம் என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது.”

மேற்கண்ட தகவலை சட்டப் பேரவையில், கேள்வி நேரத்தின்போது அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் அறிவித்தார்.

“ஸ்ரீவைகுண்டம் — ஸ்ரீரங்கம் — ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய ஊர்களின் பெயர்களை, ‘ஸ்ரீ’ என்பதற்குப் பதிலாக, ‘திரு’ என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாம் என்பது அரசின் திட்டம்” என்றார்.

இந்தியாவின் உறுதியை உலகின் எந்தச் சக்தியும் அசைக்க முடியாது

சனநாயகப் பாதையில் வீரநடை போடும்

'நீண்டகாலப் பாரம்பரியம் இந்தியாவின் ஆண்--பெண் அனைவருக்கும் உண்டு'-- தலைமையமைச்சர் இந்திரா காந்தி முழக்கம்

புதுடில்லி, டிச. 12—

" திட்டவட்டமான இலட்சியங்களுக்காகவே இந்தியா இப்போது போராடுகிறது ; எந்த நாட்டையும் அழிக்க வேண்டுமென்பதோ அல்லது எந்த நாட்டின் பகுதியையும் பிடிக்க வேண்டுமென்பதோ இந்தியாவின் ஆசை இல்லை ; இந்தியாவைப் பற்றி அவதூறுப் பிரசாரம் நடப்பதால் இதை நன்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

" இந்தப் போர் இந்தியச் சுதந்தரத்தைப் பலப்படுத்திக்கொள்வதற்கு மட்டுமல்ல -- இன்னமும் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கும் மக்களின் சுதந்தரத்துக்கும் சேர்த்துத்தான் இந்தியா போராடுகிறது ; எனவே, நமது போர் ஓர் ஆழ்ந்த இலட்சியத்துக்காக நடக்கும் போராகும்.

" வங்க தேச மக்களின் சனநாயகக் கோரிக்கைகளை -- விருப்பங்களை ஒடுக்கப் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா உதவுவதானது அதன் கம்யூனிச எதிர்ப்புக் கூட்டின் உண்மை உருவத்தை அம்பலமாகிவிட்டது ; கம்யூனிச எதிர்ப்பின் பெயரால் சனநாயகத்தையும் -- நீதியையும் எப்படி ஒடுக்க முடியும எனத் தெரியவில்லை.

" நான், கம்யூனிசத்துக்கு ஊக்கமளிப்பதாகவும், இந்தியாவைச் சீனவிடமிருந்து காப்பதற்கு இடையூருக இருப்பதாகவும் சொன்னவர்கள், இப்போது, 'சீன ஒரு மாபெரும் நாடு ; அதன் வழியில் யாரும் குறுக்கிடக்கூடாது' என்றெல்லாம் சொல்கிருர்கள்.

" ஒரு மக்களின் சுதந்தர உணர்வை உலகில் எந்தச் சக்தியாலும் அடக்கிவிட முடியாது ; கொடுமைகளிலிருந்து விடுதலை பெற விரும்பும் மக்களை ஆதரித்து நிற்பதென்ற இந்தியாவின் உறுதியையும் உலகில் எந்தச் சக்தியாலும் அசைக்க முடியாது !

" உலகிலுள்ள மற்ற நாடுகள்போல் இந்தியா இராணுவரீதியில் வலிமை கொண்டதாக இல்லாமல் இருக்கலாம் ; ஆனல், இந்தியாவின் உணர்ச்சியை யாராலும் நசுக்கிவிட முடியாது ; இந்தியா தொடர்ந்து சனநாயகப் பாதையில் -- நீதிப் பாதையில் செல்லவே செய்யும் -- அவற்றை நோக்கி வீரநடை போடும் !"

இவ்வாறு தலைமையமைச்சர் இந்திரா காந்தி, புதுடில்லியில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் உரையாற்றுகையில் உணர்ச்சி மேலோங்கக் குரலெழுப்பி முழங்கினர் ; தொடர்ந்து அவர் கூறியதாவது :—

" வங்காள தேசத்தின் அப்பாவி மக்களுக்குப் பாகிஸ்தான் இராணுவம் செய்த கொடுமைகளைப் பார்க்காமல் கண்ணை மூடிக்கொண்டு இருக்கமுடியுமா ? ஆனல் அப்போழுது எல்லாம் அமைதியாக இருக்கும்படி உலக நாடுகள் கேட்டுக் கொண்டன ; நாங்களும் 9 மாதங்கள் காத்திருந்தோம் ; ஆனல், வங்க தேச நிலைமைகளினல் இந்தியாவின் எல்லைக்கே ஆபத்து என்ற வரும் பொழுது எப்படிச் சும்மா இருக்கமுடியும் ?

" பாகிஸ்தானை ஒரு பகை நாடாகவோ – பாகிஸ்தான் மக்களை பகைவர்களாகவோ இந்தியா ஒருபோதும் கருதியதில்லை ; 'ஒரு சிறிய கும்பலால் பாகிஸ்தான் மக்கள் அடக்கி ஒடுக்கப்படுகிருர்களே' என்ற அனுதாபம்தான் இந்தியாவுக்கு உண்டு ; பாகிஸ்தான் மக்களுக்கு உண்மை நிலைமையை எடுத்துரைத்தால் அவர்கள், சனநாயக வழியில் நாட்டைப் பலப்படுத்தித் தங்கள் வறுமையைப் போக்கிக்கொள்வார்கள் என்பது உறுதி."

" அமெரிக்கா போன்ற நாடுகள் போர்க் கருவிகளை வழங்கியதுதான் பாகிஸ்தானைப் பலவீனப்படுத்திவிட்டது ; போர்க் கருவிகளைக் கொடுத்தே அந்த நாட்டை அழித்துவிட்டார்கள்.

போர்க் கருவிகளின் பலம் இருந்ததாலேயே, மக்களின் விருப்பங்களை மதிக்கவேண்டிய அவசியமில்லை -- எந்த நிலைமையையும் இராணுவப் பலத்தைக்கொண்டே சமாளித்துவிடலாம்' என்ற திமிர், இராணுவ ஆட்சியாளருக்கு ஏற்பட்டுவிட்டது !

" இந்தியா எத்தகையது என்பது வெளியிலுள்ள சிலருக்குத் தெரியாதிருக்கக்கூடும் ; இந்தியப் பெண்ணினம் எத்தகையது என்பதும் அவர்களுக்கு தெரியாமல் இருக்கக்கூடும் !

" இந்திய ஆண்களுக்கும் -- பெண்களுக்கும் நீண்டகால நாகரீகப் பாரம்பரியம் உண்டு ; அபாயங்களையும் -- மிரட்டல்களையும் எவ்வாறு சமாளிப்பது என்பது நமக்குத் தெரியும் ; ஆக்கிரமிப்பாளர்களை எதிர்க்கவும் நமக்குத் தெரியும் !

" நமது சுதந்தரப் போராட்டத்தை ஒடுக்க அந்நியர்கள் என்ன செய்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும் ; ஆனல் இறுதியில் இந்தியா வெற்றி பெற்றது."

பாகிஸ்தான் இராணுவம் செய்யப்போவது என்ன ?

தலைமையமைச்சர் இந்திரா காந்தி, வங்காள தேசத்திலுள்ள பாகிஸ்தான் இராணுவத்தினருக்கு அறிவுரை வழங்கும் அளவில் கூறியதாவது :—

" மேற்குப் பாகிஸ்தான் இராணுவத்தினர் தாமாக விரும்பி வங்க தேசத்துக்குப் போகவில்லை ; அவர்கள் அங்கு அனுப்பப்பட்டார்கள்.

" வங்காள தேசத்தில் உள்ள பாகிஸ்தான் துருப்புக்கள் நடைமுறை நிலவரத்தை உணர்ந்து தாங்களாகவே அப்பகுதியிலிருந்து வெளியேற வேண்டும் ; அவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள், சுதந்தரத்துக்காகப் போராடும் மக்களின் அனுதாபத்தைப் பெறுவார்கள்.

" வங்காள தேசத்திலிருந்து திரும்பிச் செல்வதை அங்குள்ள பாகிஸ்தான் இராணுவம் விரும்புகிறது ; அதைத் தெரிவித்துத் தந்திகளும் அனுப்பியிருக்கிறது ; ஆனல் இஸ்லாமாபாத்தில் உள்ள ஆட்சியினர்தான் அவர்கள் அவ்வாறு செய்யாமல் தடுப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

" வங்க தேசம் நிலைத்துவிட்டது ; பாகிஸ்தான் இராணுவம் இந்த உண்மையை உணர்ந்து தானகவே அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும் ; அப்படிச் செய்தால்தான் பிறகு கொஞ்சமாவது நல்லுறவுக்கு வழியுண்டு."

சிறைப் பிடிக்கப்பட்ட அதிகாரிக்கு இந்தியா செய்யும் உதவி

சேமித்து வைத்திருந்த பணத்தை குடும்பத்திற்கு அனுப்புகிறது

புதுடில்லி, டிச. 13—

போரில் வீர சாகசங்கள் மட்டுமன்றி மனமுருக்கும் நிகழ்ச்சிகளும் ஏற்படுகின்றன என்பதற்கு இதோ ஓர் எடுத்துக்காட்டு :—

வங்க தேசத்தில் பாகிஸ்தான் இராணுவத்தில் கீழ்நிலை அதிகாரியாகப் பணிபுரியும் கிழக்கு வங்காளி ஒருவர் சிறைப்படுத்தப்பட்டபோது--அவர் சேமித்து வைத்திருந்த ரூ 1500 ஐ இந்தியத் துருப்புகளிடம் அளித்தார் ; இந்தச் சேமிப்பைத் தமது மனைவிக்கு அனுப்ப நினைத்ததாகவும் போர் காரணமாக அனுப்பமுடியவில்லை என்றும், அதை எப்படியாவது அனுப்புமாறும் அவர் இந்திய அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

மேற்குப் பாகிஸ்தானிலிருந்து செல்ல வேண்டிய இந்தப் பணம், இப்போது இந்தியா வழியாகச் செல்லவிருக்கிறது.

புதுவை பற்றி ஒருமுக முடிவு

சென்னை, டிச. 13—

நேற்றிரவு 8 மணியளவில் கழகத் தலைவர் கலைஞர், பொதுச் செயலாளர் நாவலர், துணைப் பொதுச்செயலாளர்கள் என். வி. நடராசன் -- க. இராசாராம் ஆகியோரைப் புதுவை அமைச்சர்களும், புதுவைச் சட்டமன்ற தி.மு.க. உறுப்பினர்கள் மற்றும் மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களும் சந்தித்துப் பேசினர்.

புதுவை உள்துறை இலாகாவைப் புதுவை முதல்வர் பாரூக் தம்மிடம் மூன்று மாதங்கட்கு வைத்திருந்து ஏப்ரல் முதல் வாரம் அந்த இலாகாவை முன்போலவே திரு. இராமசாமியிடம் ஒப்படைப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

இந்த முடிவு அனைவராலும் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அமெரிக்காவின் 7-வது கடற்படை

பசிபிக் பகுதியிலிருந்து புறப்பட்டிருக்கிறதா ?

புதுடில்லி, டிச. 13—

" அமெரிக்காவின் 7-வது கடற்படை, பசிபிக் பகுதியிலிருந்து புறப்பட்டிருப்பதாகக் கூறப்படும் செய்திபற்றி நான் ஏதும் கேள்விப்படவில்லை "

என்று வெளிவிவகாரத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காஷ்மீர் முதல்வர் சாதிக் மறைவு

சந்திகார், டிச. 13—

ஜம்மு--காஷ்மீர் முதலமைச்சர் ஜி. எம். சாதிக், நேற்று இங்குள்ள மருத்துவமனையில் இயற்கையெய்தினர் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவருக்கு மனைவியும் -- ஒரு புதல்வரும் உண்டு.

அவருடைய செய்தி கேட்டு காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகர் அதிர்ச்சியடைந்தது.

காஷ்மீர் மாநிலத் திட்ட அமைச்சர் மீர் காசிம், இடைக்கால முதல்வராகப் பதவியேற்ருர்.

தி.மு.க. தலைமைச் செயற்குழு-முதலமைச்சர் இரங்கல்

நேற்று சென்னையில் நடைபெற்ற தி. மு. க. தலைமைச் செயற்குழு, சாதிக் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றியது.

"ஒரு நல்ல மனிதரை நாடு இழந்துவிட்டது" என கழகத் தலைவர் கலைஞர் கருணநிதி அவர்கள் இரங்கற்செய்தி விடுத்துள்ளார்.

அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில், டெல்லியிலும்-எல்லா மாநிலத் தலைநகர்களிலும் கொடிகள் அரைக் கம்பத்தில் தழைப் பறந்தன.

காங்கிரசின் அதிகாரபூர்வமான ஏடு அல்ல!

'நவசக்தி' நிலைபற்றி எதிர்கக் கட்சித் தலைவர்

சென்னை, டிச. 12—

பாதுகாப்புச் சட்டப்படி 'நவசக்தி' இதழாசிரியர்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்துச் சட்டமன்ற மேலவையில், எதிர்க் கட்சித் தலைவர் திரு. கே. இராசாராம் நாயுடு அவர்கள், ஒத்திவைப்புத் தீர்மானமொன்றைக் கொண்டுவந்தார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அத்தீர்மானத்தின்மீது விளக்கம் அளித்துப் பேசுகையில், 'காங்கிரசுக் கட்சியின் அதிகாரபூர்வமான பத்திரிகையான நவசக்தி' என்று குறிப்பிட்டார்.

உடனே திரு. கே. இராசாராம் நாயுடு அவர்கள் இடைமறித்து, 'அந்தப் பத்திரிகை, காங்கிரசின் அதிகாரபூர்வமான ஏடு அல்ல -- தனிப்பட்ட ஒருவரின் பத்திரிகைதான்' என்ருர்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா காட்டும் விசுவாசம்

ஆயுதம் அனுப்புவது தொடருகிறதாம்

புதுடில்லி, டிச. 13—

பாகிஸ்தானுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக அமெரிக்கா இன்னும் ஆயுதம் வழங்கிக் கொண்டிருப்பதாக டில்லிஇராசதந்திர வட்டாரங்களில் பலத்த சந்தேகம் காணப்படுகிறது.

'சீட்டோ' – 'சென்டோ' இராணுவ ஒப்பந்தங்களின் சில இரகசியப் பிரிவுகளின்கீழ் மேற்குப் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா இராணுவ உதவி அளிப்பதாக வாஷிங்டனிலிருந்தும், இஸ்லாமாபாத்திலிருந்தும வந்த சில செய்திகள் கூறின.

பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுத உதவி நீடிப்பது பற்றி டில்லியிலும், மாஸ்கோவிலும் நடக்கும் உயர்மட்டப் பேச்சில் விவாதிக்கப்படும் என்று தெரிகிறது.

கராச்சி சிவில் விமான நிலையத்தில் ஆயுதங்களை சில அந்நிய விமானங்கள் இறக்கியதாகச் சில நாட்களுக்கு முன்பு, நேசபாவமான ஒரு ஐரோப்பிய நாடு இந்தியாவிடம் தெரிவித்தது.

சிற்றுளி சுப்பிரமணியம் நினைவு நிகழ்ச்சி

கடந்த 6—12—71 அன்று இயற்கையெய்திய சேலம் சிற்றுளி சுப்பிரமணியம் அவர்களின் இறுதிச் சடங்குகள் (நினைவு நிகழ்ச்சி) 14-12-71 காலை 8-மணியளவில் சேலம் டவுன் இரண்டாவது அக்கிரகாரம் வன்னியகுல சத்திரியர் நந்தவனத்தில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-1) [illegible] வெளியிடப்படுகிறது.